# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:90** **தேதி:-14.01.2016**

## 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்

அன்பார்ந்த தோழர்களே,

7ஆவது சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கான பணிகள் துவங்கி விட்டன. 7ஆவது சங்க அங்கீகார தேர்தல் நடத்துவது தொடர்பாக 11.01.2016 அன்று நிர்வாகம் அனைத்து சங்கங்களின் கூட்டத்தை நடத்தியுள்ளது. நமது BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், தலைவர் தோழர் பல்பீர்சிங் அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். நிர்வாகத்தின் சார்பில் திரு ஷமீம் அக்தர் PGM(SR) மற்றும் திரு ராம் சகல் ADDL GM (SR) அவர்களும் கலந்துக் கொண்டனர். 6ஆவது சங்க அங்கீகார தேர்தலில் பங்கு பெற்ற அனைத்து சங்க தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். அந்தக் கூட்டத்தில் 7ஆவது சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கான கீழ்கண்ட அட்டவணையை அறிவித்தது.

| | |
|---|---|
| மனுதாக்கல் செய்வதற்கான கடிதம் வெளியிடுவது | : 14.01.2016 |
| தேர்தல் அறிவிப்பு கொடுக்கும் தேதி | : 18.02.2016 |
| வாபஸ் பெறுவதற்கான கடைசி தேதி | : 22.02.2016 |
| **தேர்தல் நாள்** | **: 26.04.2016** |
| வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகள் அறிவிப்பது | : 28.04.2016 |

இந்தக் கூட்டத்தில் ஒரு சில அமைப்புகள் 7ஆவது சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். நமது BSNL ஊழியர் சங்கம் அதற்கான அவசியம் ஏதும் இல்லையென்றும், அறிவிக்கப்பட்ட அட்டவணைப்படியே தேர்தல் நடைபெற வேண்டும் என கேட்டுக் கொண்டதுடன் அதற்கான கடிதம் ஒன்றையும் DIRECTOR(HR) மற்றும் PGM(SR) அவர்களுக்கும் அனுப்பியுள்ளது.

நடைபெற்று முடிந்த ஆறு சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்களில் தொடர்ச்சியாக ஐந்து தேர்தல்களில் தொடர்ச்சியாக முதன்மை சங்கமாக வெற்றி பெற்று ஊழியர்களின் நம்பிக்கையை முழுமையாக பெற்றுள்ள BSNL ஊழியர் சங்கம் இந்த முறையும் முதன்மை சங்கமாக வருவதற்கான ஆயத்த பணிகளை அனைத்து தோழர்களும் உடனடியாக துவங்க வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**